2. வினாக்கள்—விடைகள்

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள். வினா எண் 61, திருமதி ஆர். சசிகலா, மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்.

61—

குடகனாறு சீரமைப்பு

***7489—திருமதி ஆர். சசிகலா:**

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணராயபுரம் தொகுதி, வெள்ளியணை பகுதியில் ஓடும் குடகனாறை சீர்செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) கிருஷ்ணராயபுரம் தொகுதி, வெள்ளியணை பகுதியில் ஓடும் குடகனாறை சீர்செய்யும் திட்டம் ஏதும் தற்போது இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருமதி ஆர். சசிகலா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெண்களின் காவல் தெய்வம், மாண்புமிகு தங்கத் தாரகை இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதம் தொட்டு வணங்குகிறேன். விவசாயிகளின் நலனே தன் நலனாகக் கொண்டு, இவ்வளவு வறட்சிக் காலங்களிலும் மக்களின் நலனில் அக்கறை கொண்ட அம்மா அவர்கள், மழைநீர் சேமிப்பு எனும் மகத்தான திட்டம் போட்டு ஏரி, வாய்க்கால், குளங்களைத் தூர்வாரச் செய்து, விவசாயிகள் செலுத்தவேண்டிய வட்டி மற்றும் அபராத வட்டியை இரண்டு ஆண்டுகளுக்குத் தள்ளுபடி செய்து, விவசாயிகள் வாங்கும் கடனுக்கு வட்டி 14 சதவிகிதமாக இருந்ததை 9 சதவிகிதமாகக் குறைத்து, விவசாயிகளின் வாழ்வில் ஒளியேற்றிய ஒளி விளக்கே! என்னுடைய தொகுதியில் கடந்த ஆண்டு குடகனாறு நீர்த்தேக்கப் பாசன

2005 மார்ச் 4]

வாய்க்கால்களை மேம்படுத்தும் பணிகள் செய்து முடிக்கப் பெற்றதாக அறிகின்றேன். அதன் விவரத்தை அமைச்சர் அவர்கள் இங்கே அறிவிப்பாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடகனாறு நீர்த்தேக்கத்திலிருந்து வலது பக்கம் செல்லும் வாய்க்கால், 53.515 கிலோ மீட்டரில் வெள்ளியணை கண்மாயும், அதனையடுத்து உப்பிடாமங்கலம், வீரராக்கியம் மற்றும் வளையல்காரன்புதூர் ஆகிய நான்கு கண்மாய்கள் உள்ளன. குடகனாறு அணையில் மழைக் காலங்களில் கிடைக்கப்பெறும் உபரி நீரைக் கொண்டு, இந்த வெள்ளியணை மற்றும் அதன்கீழ் உள்ள மூன்று கண்மாய்கள் வாயிலாகத் தண்ணீரைத் தேக்கி, அப்பகுதியில் 1,372 ஏக்கர் நிலங்கள் பாசனம் பெறுகின்றன. இந்தப் பாசனக் கால்வாய்மூலம், ரூ.1,08,73,928 மதிப்பீட்டில் மேம்படுத்தும் பணிகள் யாவும் மார்ச் 2004-ல் முடிக்கப்பட்டுள்ளன. எனவே, கிருஷ்ணராயபுரம் தொகுதி, வெள்ளியணை பகுதியில் ஓடும் குடகனாறைத் தூர்வாரவோ அல்லது சீர் செய்யவோ திட்டம் ஏதும் தற்போது இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

திருமதி ஆர். சசிகலா: மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், அமைச்சர் அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 62, திரு. எம். சுப்பையா பாண்டியன், மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

62—

பாலம் கட்டுதல்

***23909—திரு. எம். சுப்பையா பாண்டியன்:**

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், அச்சன்புதூர்—இலத்தூர் செல்லும் சாலையில் அனுமான் நதியில் உள்ள பாலம் இடிந்து விழும் நிலையில் உள்ளதாலும், போக்குவரத்திற்கு ஆபத்தாக உள்ளதாலும் புதிய பாலம் கட்ட அரசிடம் திட்டம் உள்ளதா?